Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349


# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி


KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லம்
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன், அக்டோபர் 30, 2024 | இதழ் 200

## ரம்ஜான், பக்ரீத், கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகைகளுக்கு வாழ்த்து சொல்லும் முதல்வர் மு க ஸ்டாலின், இந்துக்களை மட்டும் வெறுக்கிறாரா?

*சென்னை, 30 அக் 2024:* தீபாவளிப் பண்டிகையின் போது அதிமுக, பாஜக உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் சார்பில் பொதுமக்களுக்கு வாழ்த்து தெரிவிப்பது வழக்கம். ஆனால், திமுக தலைமை சார்பில் இதுவரை தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகளுக்கு வாழ்த்து சொல்லப்பட்டது இல்லை. இதனால் திமுகவை இந்துக்களுக்கு எதிரான கட்சி என்று பாஜக உள்ளிட்ட கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றன. ரம்ஜான், பக்ரீத், கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகைகளுக்கு வாழ்த்து சொல்லும் முதல்வர் ஸ்டாலின், இந்துக்களை மட்டும் வெறுப்பதாக பாஜகவினர் குற்றம் சாட்டி வருகின்றனர். திமுக ஆட்சிக்கு வந்த பிறகு கட்சித் தலைவராக இல்லாமல் முதல்வராக மு.க.ஸ்டாலின் மக்களுக்கு தீபாவளி வாழ்த்து சொல்ல வேண்டும் என பாஜக தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனாலும், தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் இதுவரை தீபாவளி வாழ்த்து தெரிவித்து அறிக்கை வெளியிட்டதில்லை.

## தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நாட்டு மக்களுக்குக் குடியரசுத் துணைத் தலைவர் வாழ்த்து

*சென்னை, 30 அக் 2024:* தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டுக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி:

"தீபாவளித் திருநாளை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரதத்தில் மட்டுமல்ல, உலகெங்கிலும் உள்ள நமது நாட்டைச் சேர்ந்த மக்களால் பயபக்தியுடனும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்படும் தீபாவளி, இருளுக்கு எதிரான ஒளியின் வெற்றியையும், விரக்திக்கு எதிரான நம்பிக்கையையும், அறியாமைக்கு எதிரான அறிவையும் குறிக்கிறது. தீபாவளிப் பண்டிகை நம் அனைவருக்குமான நேர்மையின் செய்தியை சுமந்து வருகிறது. நமது கடமைகளை நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும் நிறைவேற்ற வலியுறுத்துகிறது.

இந்த தீபாவளியையொட்டி அயோத்தியில் நடைபெறும் தீபோத்சவம் உண்மையிலேயே ஒரு தெய்வீகக் காட்சியாக இருக்கும். தீபங்களின் பிரகாசம் உலகத்தையும், நமது மனம், ஆன்மாவின் உள் கருவறையையும் ஒளிரச் செய்யும்போது நமது மக்களை கொண்டாட்டத்தில் ஒன்றிணைக்கும்.

நாம் விளக்குகளை ஏற்றும் போது, தீபாவளியின் பிரகாசம் நமது பாதையை ஒளிரச் செய்து, ஒற்றுமை, வளம், எல்லையற்ற முன்னேற்றம் ஆகியவை கொண்ட எதிர்காலத்தை நோக்கி பாரதத்தை வழிநடத்தட்டும். இந்தப் பண்டிகையின் ஒளி, நம் இதயங்களில் ஞானம், இரக்கம், அமைதி ஆகியவற்றை ஊக்குவிக்கட்டும். இது நம் வாழ்க்கையை வளப்படுத்தி நமது சமூகங்களை வலுப்படுத்தட்டும். அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்!

## புதிய கண்டுபிடிப்பு, தொழில்நுட்பம் ஆகியவற்றில் இந்திய இளைஞர்கள் மிகச் சிறந்த திறனுடன் திகழ்கின்றனர்: பிரதமர்

*சென்னை, 30 அக் 2024:* கிட்ஹப் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி தாமஸ் டோம்கே கூறியதை பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கோள் காட்டியுள்ளார். உலகில் டெவலப்பர் நிபுணர்கள் எண்ணிக்கை வேகமாக வளர்ந்து வருவதற்கு வாழ்த்துக்கள் தெரிவித்துள்ள தாமஸ் இந்தியா உலக தொழில்நுட்ப மையமாக வளர்வது தடுக்கமுடியாதது என்று கூறியுள்ளார்.

புதுமை மற்றும் தொழில்நுட்பத்தில் இந்திய இளைஞர்களின் சாதனைகளை திரு மோடி பாராட்டியுள்ளார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் பதிவிட்டிருப்பதாவது:

"கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்பம் என்று வரும்போது, இந்திய இளைஞர்கள் தலைசிறந்தவர்களாக திகழ்கின்றனர்!"

## துன்பங்கள் நீங்கி இன்பங்கள் பெருகட்டும் எல்லா வளமும் பெற்று இன்பமுடன் வாழுங்கள்: எடப்பாடி தீபாவளி வாழ்த்து

*சென்னை, 30 அக் 2024:* அனைவரது வாழ்விலும் துன்பங்கள் நீங்கி, இன்பங்கள் பெருகட்டும் என எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் கூறியிருக்கிறார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:

நாடு முழுவதும் மகிழ்ச்சி வெள்ளம் பொங்க, தீபத்திருநாளாம் தீபாவளித் திருநாளை உற்சாகத்துடன் கொண்டாடி மகிழும் அன்பிற்கினிய மக்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நரகாசுரன் எனும் கொடிய அரக்கன் தனது கொடுஞ்செயல்களால் மக்களையும், தேவர்களையும் பெருந்துன்பத்திற்கு ஆளாக்கினான். அக்கொடியவனை மகாலட்சுமி துணையுடன் திருமால் அழித்த தினமே தீபாவளி பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. தீமைகள் அழிந்து நன்மைகள் பெருகும் இந்த நன்னாளில், மக்கள் புத்தாடைகளை அணிந்து இறைவனை வழிபட்டு, இல்லந்தோறும் மகிழ்ச்சி பொங்க இனிப்புகளைப் பரிமாறி, பட்டாசுகளை வெடித்து உறவினர்களுடனும், நண்பர்களுடனும் கொண்டாடி மகிழ்வார்கள்.

தித்திக்கும் இந்த இனிய தீபாவளித் திருநாளில், மக்கள் அனைவரது வாழ்விலும் துன்பங்கள் நீங்கி, இன்பங்கள் பெருகட்டும்; இன்று பெருகும் இன்பம் அனைவரிடமும் என்றென்றும் நிலைத்திருக்கட்டும். மக்கள் அனைவரும் எல்லா வளமும், நலமும் பெற்று இன்பமுடன் வாழ்ந்திட வேண்டும் என்று மனதார வாழ்த்தி, அனைவருக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரது நல்வழியில், இனிய தீபாவளி நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக்கொள்கிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

## "மத்தாப்புகளின் திருவிழாவான தீபஒளித் திருநாளை உற்சாகமாகக் கொண்டாடும் தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த தீபஒளித் திருநாள் வாழ்த்துகள் - பா ம க நிறுவனர் ராமதாஸ்

*சென்னை, 30 அக் 2024:* பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தீபாவளிக்கு வாழ்த்து தெரிவிக்கும் விதமாக வெளியிட்டுள்ள அறிக்கையில், "மத்தாப்புகளின் திருவிழாவான தீபஒளித் திருநாளை உற்சாகமாகக் கொண்டாடும் தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த தீபஒளித் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மனிதன் ஒரு சமூக விலங்கு. மனிதர்களால் தனித்து வாழ முடியாது.

மனிதர்கள் தங்களின் உறவுகள், நண்பர்களுடன் ஒன்று கூடவும், மகிழ்ச்சியடையவும் குறிப்பிட்ட கால இடைவெளியில் கொண்டாட்டங்கள் அவசியமாகும். அதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருவதற்காகத் தான் தீபஒளித் திருநாள் போன்ற கொண்டாட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் தீபஒளித் திருநாள் மகிழ்ச்சிக்கான கருவி. தமிழ்நாட்டின் முதன்மைத் தொழில் வேளாண்மை. கழனி செழித்தால் தான் மக்கள் மனமும் செழிக்கும்.

ஆனால், தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இந்த ஆண்டும் குறுவை சாகுபடி தண்ணீர் இல்லாமல் படுதோல்வி அடைந்துள்ளது. விளைவித்த பயிர்களுக்கும் உரிய விலை கிடைக்காததால் கொண்டாட்ட மனநிலையில் திளைக்க வேண்டிய மக்கள் துயரத்தில் வாடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் துயரத்தைப் போக்கி நிம்மதியை அளிக்க வேண்டிய அடிப்படைக்கடமையைக் கூட அரசு செய்யவில்லை.

கல்வி, வேலைவாய்ப்பு, சமூகநீதி, இளைஞர் நலன், தொழிலாளர் நலன், மகளிர் நலன் என அனைத்துத் துறைகளிலும் இருள் தான் சூழ்ந்திருக்கிறது. வண்ண ஒளிகளின் திருவிழா, மத்தாப்புகளின் திருவிழா என ஒருபுறம் தீபஒளித் திருநாளை வர்ணித்தாலும் மக்களின் வாழ்க்கை இருள் சூழ்ந்ததாகவே இருக்கிறது. இந்த இருள் அகற்றப்பட்டு உண்மையான வெளிச்சம் பிறக்கும் போது தான் தீபஒளி அர்த்தம் உள்ளதாக இருக்கும்.

தமிழ்நாட்டின் பொறுப்புள்ள குடிமக்களாக இருளை பழித்துக் கொண்டு மட்டும் இருப்பதில் பயனில்லை. அதை அகற்றி ஒளியேற்ற வேண்டும். அந்த ஒளியால் சமூகநீதி, அமைதி, வளம், வளர்ச்சி, ஒற்றுமை, நல்லிணக்கம், சகோதரத்துவம், பன்முகத்தன்மை உள்ளிட்ட ஜொலிக்கவும், மக்களின் வாழ்வில் இல்லாமை என்பதே இல்லாததாகி, மகிழ்ச்சி மட்டுமே நிறைந்திருக்க தீப ஒளி வகை செய்யட்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## முதல் முறையாக துணை முதல்வர் உதயநிதி தீபாவளி வாழ்த்து

*சென்னை, 30 அக் 2024:* இத்தனை ஆண்டுகளாக தவிர்த்து வந்த நிலையில், முதல் முறையாக துணை முதல்வர் உதயநிதி தீபாவளி வாழ்த்து தெரிவித்துள்ளார். 'இந்த மாற்றம் உண்மையாக இருந்தால் வரவேற்கத்தக்கது தான்' என்கின்றனர், ஆன்மிகத்தில் ஈடுபாடு உடையவர்கள்.

தி.மு.க., தலைவர்களுக்கு ஹிந்து பண்டிகைகளுக்கு வாழ்த்து சொல்வதில் ஒரு தயக்கம் இருக்கிறது. 'தங்களை பகுத்தறிவாதி இல்லை என்று சொல்லி விடுவார்களோ' என்ற அச்சத்தின் காரணமாக அந்த தயக்கம் இருக்கிறது. அதனால் தான் முதல்வர் ஸ்டாலின் ஹிந்து பண்டிகைகளுக்கு வாழ்த்து சொல்வதில்லை.

அதேநேரத்தில் மற்ற மதத்தினர் கொண்டாடும் பண்டிகைகளுக்கு முன்தினமே, மேடைப்பேச்சு வாயிலாகவோ, சமூக வலைதள வாயிலாகவோ முதல்வர் ஸ்டாலின் அறிக்கை விட்டு வாழ்த்து தெரிவிப்பதை வாடிக்கையாக கொண்டுள்ளார். முதல்வர் ஸ்டாலின் ஹிந்து பண்டிகைகளுக்கு வாழ்த்து தெரிவிக்க வேண்டும் என பா.ஜ., உள்ளிட்ட பல்வேறு கட்சியினர் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால், அந்த கோரிக்கைகளை அவர் கண்டுகொள்வதில்லை. இந்த நடைமுறை நீண்ட காலமாகவே தி.மு.க., அரசியலில் இருந்து வருகிறது. இந்நிலையில் சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் துணைமுதல்வர் உதயநிதி தீபாவளி வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர் பேசுகையில், 'நம்பிக்கை உள்ளவர்களுக்கும், கொண்டாடுபவர்களுக்கும் தீப ஒளி திருநாள் வாழ்த்து தெரிவித்துக்கொள்கிறேன்' என கூறினார்.

தி.மு.க.,வின் முன்னணி தலைவர் ஒருவர் தீபாவளிக்கு வாழ்த்து தெரிவிப்பது இது தான் முதல் முறை என்கின்றனர், அரசியல் நோக்கர்கள். 'வெறும் அரசியலுக்காக இல்லாமல், உண்மையிலேயே மனமாற்றம் ஏற்பட்டிருந்தால் வரவேற்கத்தக்கது தான்' என்கின்றனர், ஆன்மிகத்தில் ஈடுபாடு உடைய பெரியோர்.

துணை முதல்வரிடம் ஏற்பட்டுள்ள இந்த மனமாற்றம், அவரது குடும்பத்திலும் எதிரொலிக்குமா, முதல்வரும் இந்தாண்டு தீபாவளிக்கு வாழ்த்து தெரிவிப்பாரா என்ற எதிர்பார்ப்பு, அரசியல் கட்சியினர் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

## தீபாவளி பண்டிகையை முன்னிட்டு குடியரசுத்தலைவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்

*சென்னை, 30 அக் 2024:* தீபாவளி பண்டிகையை முன்னிட்டு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

குடியரசுத்தலைவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வசிக்கும் அனைத்து இந்தியர்களுக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீபாவளி என்பது மகிழ்ச்சி மற்றும் உற்சாகத்தின் பண்டிகை. இந்தத் திருவிழா அறியாமைக்கு எதிரான அறிவின் வெற்றியையும், தீமைக்கு எதிரான நன்மையையும் குறிக்கிறது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல்வேறு சமூகங்கள் இந்தப் பண்டிகையை மிகுந்த ஆர்வத்துடன் கொண்டாடுகின்றன. இந்தப் பண்டிகை ஒரு பிரகாசமான எதிர்காலத்திற்கான நம்பிக்கையையும் தூண்டுகிறது.

தீபாவளி பண்டிகையின் போது நாம் நமது மனசாட்சியை ஒளிரச் செய்ய வேண்டும். அன்பு, கருணை போன்ற நற்பண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும், சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்த வேண்டும். இந்தப் பண்டிகை வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களுக்கு உதவவும், அவர்களுடன் நமது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளவும் ஒரு வாய்ப்பாகும்.

இந்தியாவின் பெருமைமிகு பாரம்பரியம் குறித்து நாம் பெருமிதம் கொள்வோம். நன்மையின் மீதான நம்பிக்கையுடன், மாசு இல்லாத தீபாவளியைக் கொண்டாடுவோம். ஆரோக்கியமான, வளமான, பொறுப்பான சமுதாயத்தை உருவாக்க உறுதியேற்போம்" என்று கூறியுள்ளார்.

## அணுசக்தி துறையின் சிறப்பு முகாம் 4.0




*சென்னை, 30 அக் 2024:* அணுசக்தித் துறையுடன் அதன் அனைத்து பிரிவுகள் / பொதுத்துறை நிறுவனங்கள் / அரசு உதவி பெறும் நிறுவனங்கள் அனைத்தும் சிறப்பு இயக்கம் 4.0 க்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய தங்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு உறுதியுடன் செயல்பட்டு வருகின்றன. 17.10.2024 வரை 12612 கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டு, 12155 கோப்புகள் அகற்ற அடையாளம் காணப்பட்டுள்ளன. அணுசக்தித் துறையின் இதர பிரிவுகள் / பொதுத்துறை நிறுவனங்கள் / அணுசக்தித் துறையின் அரசு உதவி பெறும் நிறுவனங்கள் மூலம் 51 தூய்மை முகாம்கள் நடத்தப்பட்டு, பழைய பொருட்களை அகற்றியதன் மூலம் ரூ.481238/- வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

அணுசக்தித் துறையின் அனைத்து உறுப்புப் பிரிவுகள் / பொதுத்துறை நிறுவனங்கள் / அரசு உதவி பெறும் நிறுவனங்கள் மூலம் தூய்மை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுகுறித்த தகவல்கள் 'எக்ஸ்' சமூக வலைதளம் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

## தீபாவளி வாழ்த்து சொன்ன தவெக தலைவர் விஜய்! "காரிருள் விலகி நல்விடியல் பிறக்கட்டும்"

*சென்னை, 30 அக் 2024:* தீபாவளி வாழ்த்து தெரிவித்துள்ளார் தவெக தலைவர் விஜய். "தீபங்களின் ஒளி வெள்ளத்தில் காரிருள் விலகி, நல்விடியல் பிறக்கட்டும். அனைவரது இல்லங்களிலும் உள்ளங்களிலும் அன்பு, அமைதி, செல்வம் நிலைத்து நீடித்திருக்கட்டும். தீப ஒளித் திருநாளைப் பாதுகாப்பாகக் கொண்டாடி மகிழ்வோம். அனைவருக்கும் இனிய தீப ஒளித் திருநாள் நல்வாழ்த்துகள்." எனத் தெரிவித்துள்ளார் விஜய்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
புதன், அக்டோபர் 30, 2024

# அப்போலோ மருத்துவமனை தனது அதிநவீன பக்கவாத சிகிச்சை நெட்வொர்க்கின் மூலம் 4.5 மணி நேர பக்கவாத சிகிச்சை வசதியை 24 மணி நேரமும் அளிக்கிறது!



சென்னை, 30 அக் 2024: உலக பக்கவாதம் தினமான அக்டோபர் 29-ம் தேதியன்று 2024, இந்தியாவில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பக்கவாத பாதிப்புகளை நிவர்த்தி செய்வதில், அப்போலோ மருத்துவமனைகள் கொண்டிருக்கும் அக்கறையும், அர்ப்பணிப்பையும் மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கிறது. 2021-ம் ஆண்டில் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1.25 மில்லியனாக இருந்தது. ஆனால் 2023-ம் ஆண்டில் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 1.8 மில்லியனாக அதிகரித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது (ஐஎஸ்ஏ படி). இதையடுத்து அப்போலோ மருத்துவமனைகள் மக்களிடையே பக்கவாதம் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்வதோடு, ஆரம்பநிலையிலேயே பக்கவாத பாதிப்பை கண்டறிந்து, அதற்கான ஒரு முழுமையான சிகிச்சையையும் பராமரிப்பையும் அளித்து, நோயாளிகளின் சிகிச்சை முடிவுகளில் முன்னேற்றத்தை கொடுப்பதில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் வாழ்க்கையில் நல்லதொரு மாற்றத்தை உருவாக்கி, அவர்களின் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்துவதில் அப்போலோ மருத்துவமனைகள் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது.

பக்கவாத பாதிப்பு இருப்பது தெரியவந்த உடனேயே, சிகிச்சை பெற வேண்டியது மிக மிக அவசியம். பாதிப்பு ஏற்பட்ட முதல் 4.5 மணி நேரத்தை மருத்துவ உலகில் 'கோல்டன் ஹவர்' என்று அழைக்கிறார்கள். காரணம் இந்த 4.5 மணிநேரத்திற்குள்ளாக தக்க தருணத்தில் பக்கவாத பாதிப்பிற்கான சிகிச்சையை அளிப்பதன் மூலம் பக்கவாத பாதிப்பான உடல் செயல்பட இயலாத நிலையைக் குறைப்பதிலும், பாதிப்பிலிருந்து மீண்டு வரும் வாய்ப்புகளை அதிகரிப்பதிலும் நல்ல முன்னேற்றம் இருக்கும். சென்னை அப்போலோ மருத்துவமனைகள், அதிநவீன ரோபோ தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தினால் மேம்படுத்தப்பட்ட நோயறியும் கருவிகள் மற்றும் பக்கவாத நோயாளிகளுக்கு விரைவாகவும் திறம்படவும் சிகிச்சை அளிக்க பல்நோக்கு சிறப்பு சிகிச்சை நிபுணர்களின் குழு என ஒரு முழுமையான மருத்துவ பராமரிப்புக்கு அவசியமானவற்றை ஒருங்கிணைத்து முழுவீச்சியில் சிகிச்சைகளை வழங்கி வருகிறது. நாளத்தில் பெரும் அடைப்பு உள்ள நோயாளிகளுக்கு த்ரோம்பெக்டோமி சிகிச்சையளிப்பது, பக்கவாதம் தொடங்கிய 24 மணி நேரம் வரை பயனுள்ளதாக இருக்கும். இது போன்ற அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான அணுகுமுறை நோயாளிகள் குணமடைவதில் மிகச்சிறப்பான வாய்ப்புகளை அளிப்பதோடு, பாதிப்பினால் உண்டாகும் சிக்கல்களைக் குறைக்க செய்வதோடு அவர்களது வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த உதவுகிறது.

பக்கவாத பாதிப்பிற்கு சிகிச்சையளிக்கும் அப்போலோ மருத்துவமனையின் ஸ்ட்ரோக் நெட்வொர்க் பக்கவாத சிகிச்சைக்கு நோயாளியை மையமாகக் கொண்ட ஒரு முழுமையான மருத்துவ அணுகுமுறையை வழங்குகிறது, ஒவ்வொரு நோயாளியும் தக்க நேரத்தில், மிகத்துல்லியமான சிகிச்சையைப் பெறுவதையும் உறுதிசெய்கிறது. நாள் முழுவதும் வழங்கப்படும் 24/7 அவசரகாலச் சேவைகள், செயற்கை நுண்ணறிவினால் மேம்படுத்தப்பட்ட நோய் கண்டறியும் வசதிகள் மற்றும் சி.டி. மற்றும் எம்.ஆர்.ஐ பெர்ஃப்யூஷன் ஆய்வுகள் போன்ற மேம்பட்ட இமேஜிங் நுட்பங்களைக் கொண்டிருக்கும் மருத்துவமனைகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டு தளத்தையும் அப்போலோ மருத்துவமனை கொண்டுள்ளது. இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறையானது நோயாளிகளிடையே மிக விரைவாகவும், துல்லியமாகவும் நோயைக் கண்டறிய உதவுகிறது. மேலும் த்ரோம்போலிசிஸ் த்ரோம்பெக்டமி போன்ற சிறந்த சிகிச்சைகளைத் தேர்ந்தெடுக்கவும் வாய்ப்பளிக்கிறது. மேலும் நரம்பியல் நிபுணர்கள், நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள், மெல்லிய துளை மூலம் சிகிச்சையளிக்கும் நரம்பியல் நிபுணர்கள் மற்றும் தீவிர சிகிச்சை தீவிர நிபுணர்கள் ஆகியோர் உள்ளிட்ட ஒரு சிறப்பு மருத்துவக் குழு, அந்தந்த நோயாளிகளுக்காக பிரத்தியேகமாக திட்டமிடப்பட்ட, பல்வகை சிறப்பு சிகிச்சைகளை வழங்குகிறது. பக்கவாத பாதிப்பிலிருந்து மீண்டு வருவதற்கு நீண்ட கால பிடிக்கும் சூழலில் நோயாளிகளுக்கு உதவுவதற்கும், பக்கவாதத்திற்கு பின்னர் நோயாளிகள் எதிர்கொள்ளும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்ட வலுவான நரம்பியல் மறுவாழ்வு சேவைகளை இந்த நெட்வொர்க் வழங்குகிறது. மேலும் இந்நெட்வொர்க் முழுமையான சிகிச்சைமுறையை செயல்படுத்துவதற்க்காக நோயாளிகளின் உடல்ரீதியான மற்றும் மனரீதியான தேவைகளை பூர்த்தி செய்கிறது.

டாக்டர். சீனிவாசன் பரமசிவம் கூறுகையில், "பக்கவாதம் என்பது நோயாளிகளுக்கு மட்டுமல்ல, அவர்களின் குடும்பங்களுக்கும் பெரும் பாதிப்புகளையும், இடர்பாடுகளையும் உருவாக்கக்கூடும்.. அப்போலோ மருத்துவமனைகளைப் பொறுத்த வரையில், பக்கவாத சிகிச்சையில் துரிதமாக மேற்கொள்ள வேண்டிய சூழலையும், சிகிச்சைக்கான துல்லியத்தையும் நாங்கள் நன்றாகவே புரிந்துகொண்டிருக்கிறோம். எங்கள் பல்துறை சிறப்பு சிகிச்சை குழுவானது, பாதிப்பு ஏற்பட்ட உடனே துரிதமாக மேற்கொள்ள வேண்டிய, உயிர் காக்கும் சிகிச்சைகளுக்கு மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் தயார்நிலையில் உள்ளோம். ஆரம்பகால நோயறிதலில் கவனம் செலுத்துவதன் மூலம், எங்கள் நோயாளிகள் சிறந்த சிகிச்சை பலன்களை அடைவதற்காக நாங்கள் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறோம்'' என்றார்.

டாக்டர். அருள் செல்வன் கூறுகையில், "பக்கவாத சிகிச்சை தொடர்ந்து பல ஆண்டுகளாக குறிப்பிட்டு சொல்லுமளவிற்கு பெரும் வளர்ச்சியைக் கண்டு வருகிறது. அதேபோல் இதற்கான சிகிச்சைகளில் எங்களது திறன்களும் கணிசமாக மேம்பட்டிருப்பதோடு, நிபுணத்துவமிக்கதாகி இருக்கின்றன. அர்ப்பணிப்புடன் கூடிய எங்களுடைய குழு மற்றும் அதிநவீன வசதிகள், நோயறிதல் முதல் மறுவாழ்வு வரையிலும், பாதிப்பிலிருந்து நீண்டகாலம் மீண்டு வருவதில் நேர்மறையான விளைவுகளை மேம்படுத்துவது என நோயாளிகள் முழுமையான சிகிச்சையைப் பெறுவதை உறுதிசெய்கிறது.."

அவசர சிகிச்சையாக மேற்கொள்ளப்பட வேண்டிய நோயறியும் சோதனையுடன், அப்போலோ மருத்துவமனைகள் பக்கவாத பாதிப்பிலிருந்து மீண்டு வந்தவர்கள் அவர்களாகவே தன்னிச்சையாக செயல்படுவதை மீண்டும் பெறவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் சிறப்பு நரம்பியல் மறுவாழ்வு சேவைகளை வழங்குகிறது. நரம்பியல் மறுவாழ்வு நிபுணர்களால் ஒவ்வொரு நோயாளிக்கும் ஏற்ற வகையில் தனித்தனியாக வடிவமைக்கப்பட்ட மறுவாழ்வு திட்டங்கள், ஒவ்வொரு நோயாளியின் குறிப்பிட்ட தேவைகளையும் பூர்த்தி செய்து, அவர்கள் இழந்த உடல் இயக்க செயல்பாடுகளை மீட்டெடுக்கவும், உடல் இயக்கத்தை மேம்படுத்தவும், பக்கவாதத்திற்குப் பிந்தைய வாழ்க்கையின் உயர் தரத்தை அடையவும் ஆதரவு கரம் நீட்டுகின்றன.

நரம்பியல் மற்றும் பக்கவாத சிகிச்சையில் ஆழ்ந்த அனுபவமும், நிபுணத்துவமும் உள்ள சென்னை அப்போலோ மருத்துவமனைகள், பக்கவாத நோய் பராமரிப்பு மற்றும் மேலாண்மையில் புதிய எல்லைகளைத் தொடுவதற்கும், இந்தியாவில் சுகாதாரப் பாதுகாப்புக்கான புதிய வரையறைகளை உருவாக்குவதற்கும், பக்கவாதத்திற்கு எதிரான போராட்டத்தை ஆதரிப்பதற்கும் தனது ஆதரவுக்கரத்தை அளித்து வருகிறது.

# என்டிபிசி நிறுவனம் டேராடூனில் உள்ள இந்திய பெட்ரோலிய நிறுவனத்துடன் இணைந்து ஃப்ளூ கேஸ் கரியமில வாயுவிலிருந்து மெத்தனால் உற்பத்திக்கான உள்நாட்டு கிரியா ஊக்கியை உருவாக்கியுள்ளது

சென்னை, 30 அக் 2024: கார்பன் வெளியேற்றம் என்பது புதைபடிவ எரிபொருள் மின் உற்பத்தி நிலையம் எதிர்கொள்ளும் முக்கியமான சவாலில் ஒன்றாகும். எனவே, ஃப்ளூ வாயுவிலிருந்து சிஓ2 -வைப் (சிஓ2) பிரித்து மதிப்புமிக்க எரிபொருளாகவும் ரசாயனங்களாகவும் மாற்ற உலகளவில் கவனம் செலுத்தப்படுகிறது.

டேராடூனில் உள்ள இந்திய பெட்ரோலிய நிறுவனத்துடன் இணைந்து கரியமில வாயுவை மெத்தனாலுக்கு ஹைட்ரஜனேற்றம் செய்வதற்கான உள்நாட்டு வினையூக்கியை என்டிபிசி-யின் ஆராய்ச்சி - மேம்பாட்டு பிரிவான நேத்ரா உருவாக்கியுள்ளது.

எந்தவொரு வேதியியல் தொகுப்பிற்கும் வினைவேக மாற்றி இன்றியமையாத பகுதிப்பொருளாகும். வினையூக்கியின் சிறப்பியல்புகளுக்குப் பிறகு, வினையூக்கியின் நீண்ட கால அளவு மற்றும் தர செயல்திறன் மதிப்பிடு சிறப்பாக வடிவமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 10 கிலோகிராம் மெத்தனால் முன்னோட்ட பரிசோதனை ஆலையில் மேற்கொள்ளப்பட்டது. இந்த வினையூக்கியால் உற்பத்தி செய்யப்படும் மெத்தனாலின் தூய்மை 99%-க்கும் அதிகமாக உள்ளது.

என்டிபிசிக்கு முழுமையாக சொந்தமான துணை நிறுவனமான என்டிபிசி கிரீன் எனர்ஜி லிமிடெட், உலகளாவிய பருவநிலை மாற்ற நடவடிக்கை இலக்குகள் மற்றும் 2070-க்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடைவதற்கான இந்தியாவின் இலக்குக்கு ஏற்ப, கார்பன் தடத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட முயற்சிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

# எம் . ராஜேஷ் இயக்கத்தில் ஜெயம் ரவி நடிக்கும் 'பிரதர்' திரைப்படம் தீபாவளி அக்டோபர் 31ம் தேதி அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது



சென்னை, 30 அக் 2024: இயக்குநர் எம். ராஜேஷ் இயக்கத்தில் உருவாகி இருக்கும் 'பிரதர்' திரைப்படத்தில் ஜெயம் ரவி, பிரியங்கா அருள் மோகன், பூமிகா சாவ்லா, விடிவி கணேஷ், நட்டி என்கிற நட்ராஜ் சுப்பிரமணியன், ராவ் ரமேஷ், அச்யுத் குமார் , சரண்யா பொன்வண்ணன், சீதா, சதீஷ் கிருஷ்ணன், எம்.எஸ் . பாஸ்கர், சுரேஷ் சக்கரவர்த்தி, விருத்தி விஷால், மாஸ்டர் அஸ்வின் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். விவேகானந்த் சந்தோஷம் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைத்திருக்கிறார். இந்த திரைப்படத்தின் படத்தொகுப்பு பணிகளை ஆசிஷ் ஜோசப் கையாள , கலை இயக்கத்தை ஆர் . கிஷோர் மேற்கொண்டிருக்கிறார். அக்கா-தம்பி சகோதர பாசத்தை மையப்படுத்தி உணர்வுப்பூர்வமாக தயாராகி இருக்கும் இந்த திரைப்படத்தை ஸ்கிரீன் சீன் என்டர்டெய்ன்மென்ட் நிறுவனம் தயாரித்திருக்கிறது.

குடும்பப் பொழுதுபோக்கு திரைப்படமாக உருவாகி இருக்கும் இப்படத்தை விளம்பரப்படுத்தும் பணிகளில் குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் சென்னையில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பில் இயக்குநர் எம். ராஜேஷ், நடிகர்கள் ஜெயம் ரவி, நட்டி என்கிற நட்ராஜ், விடிவி கணேஷ், நடிகை பூமிகா சாவ்லா, ஒளிப்பதிவாளர் விவேகானந்த் சந்தோஷம், படத்தொகுப்பாளர் ஆசிஷ் ஜோசப், கலை இயக்குநர் ஆர் .கிஷோர், சண்டை பயிற்சி இயக்குநர் ஸ்டன்னர் சாம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இயக்குநர் எம். ராஜேஷ் பேசுகையில், ''மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. தீபாவளி திருநாளில் என்னுடைய திரைப்படம் வெளியாகிறது. என்னுடைய இயக்கத்தில் உருவான படம் திரையரங்கத்தில் வெளியாகி மூன்று ஆண்டுகள் ஆகிறது. ஒரு சிறிய இடைவெளிக்குப் பிறகு என்னுடைய படம் திரையரங்கில் வெளியாகிறது. கொண்டாட்டத்திற்குரிய திருவிழா நாளில் வெளியாகிறது. இது எனக்கு மகிழ்ச்சியை தருகிறது. இதற்காக ரவிக்கும் நன்றி சொல்கிறேன்.

பாஸ் என்கிற பாஸ்கரன் - சந்தோஷ் சுப்பிரமணியம் இந்த இரண்டு திரைப்படத்தையும் இன்றைய டிரெண்டிற்கு ஏற்ற அளவில் அப்டேட் செய்தால் எப்படி இருக்கும் என்பதை நினைத்து தான் இந்த படத்தை உருவாக்கி இருக்கிறோம். இதனை ரசிகர்களாகிய நீங்கள் திரையரங்கத்திற்கு வருகை தந்து பார்த்துவிட்டு சொல்லுங்கள். குடும்பத்துடன் பார்க்க வேண்டிய ஜாலியான படமாக இது இருக்கும்.

இந்தப் படத்தில் நடித்த அனைத்து கதாபாத்திரங்களுக்கும் நான் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறேன்.

இந்தப் படத்தில் மிகப் பெரிய பலம் ஹாரிஸ் ஜெயராஜ் படத்திற்கான பின்னணி இசைக்கு நிறைய நேரம் எடுத்துக்கொண்டு நேர்த்தியாக உருவாக்கி இருக்கிறார். பாடல்கள் ஏற்கனவே வெளியாகி பெரிய வெற்றியை பெற்றிருக்கிறது. இந்தப் படம் வெளியான பிறகு இன்னும் இரண்டு பாடல்கள் வெற்றி பெறும். அவருக்கு நான் ரசிகன். அவருடன் இணைந்து பணியாற்றியது மிகவும் மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது.

தீபாவளியன்று குடும்பத்துடன் திரையரங்கத்திற்கு சென்று பார்த்து ரசித்து கொண்டாடும் திரைப்படமாக 'பிரதர்' இருக்கும்,' என்றார்.

நடிகர் ஜெயம் ரவி பேசுகையில், ''பிரதர் திரைப்படம் நல்லதொரு டீசன்டான மூவி. லீனியர் நரேஷனில் அழகான படமாகவும் குடும்பம் முழுவதும் மகிழ்ச்சி அடையும் வகையிலும் பிரதர் உருவாகி இருக்கிறது. ஒரு தீபாவளி படத்திற்கு என்னென்ன டிக் மார்க் வேண்டுமோ, அவை எல்லாம் ஒன்றாக சேர்ந்திருக்கும் படம் தான் பிரதர். இந்தப் படத்தை உருவாக்கும் போதும் நாங்கள் அனைவரும் சந்தோஷமாகவே பணியாற்றினோம்.

இந்தப் படத்தில் படப்பிடிப்பு நடைபெறும் தருணங்களில் நாங்கள் அனைவரும் ஒரு குடும்பமாகத்தான் இருந்தோம். தயாரிப்பாளர் சுந்தர் எங்கள் அனைவருக்கும் அனைத்து வசதிகளையும் அளித்தார். படப்பிடிப்பு நடைபெற்ற தருணத்தில் பூமிகாவின் பிறந்தநாள் வந்தது, அதற்காக படப்பிடிப்பு தளத்தில் கேக் வெட்டி கொண்டாடினோம். படப்பிடிப்பு நடைபெற்ற நாட்கள் முழுவதும் அனைவரிடமும் அன்பும், அக்கறையும் இருந்தது. இந்தப் படத்தை நடித்த நடிகர்களையும் பணியாற்றிய தொழில்நுட்ப கலைஞர்களையும் மறக்க முடியாது. கடுமையாக உழைப்பில் உருவான திரைப்படம் இது.

சண்டை பயிற்சி இயக்குநர் ஸ்டன்னர் சாம சிறுவயதில் இருந்தே தெரியும். பேராண்மை படத்தில் மரத்தின் மீது ஒரு காட்சி ஒன்று இருக்கும். அந்த காட்சியில் நான் நடிக்க தயங்கிய போது.. அவர் அவர் அந்த மரத்தின் மீது ஓடி காண்பித்து நம்பிக்கையை உண்டாக்கினார். இந்த படத்தில் அவருடன் இணைந்து பணியாற்றியது மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது.

கலை இயக்குநர் கிஷோர் எந்த ஒரு சிக்கலான தருணத்தையும் எளிதாக கையாளக்கூடிய திறமை மிக்கவர்.

ஃபேமிலி டிராமா ஜானர் திரைப்படங்களை எடிட் செய்வது கஷ்டமான விஷயம். என் அப்பா எடிட்டர் மோகன் நிறைய ஃபேமிலி டிராமா ஜானரிலான படங்களை எடிட் செய்திருக்கிறார். அப்போது நான் அருகில் இருந்து பார்த்திருக்கிறேன். அது எவ்வளவு கடினம் என எனக்குத் தெரியும். அதனால் இந்த மாதிரி படங்களை எடிட் செய்வதற்கு ஒரு திறமையான எடிட்டர் தேவை. இந்த மாதிரி படங்களை எடிட் செய்வதற்கு பயிற்சி வேண்டும் அனுபவம் வேண்டும். அது எல்லாம் இப்படத்தை தொகுத்த ஆசிஷுக்கு இருக்கிறது. அவருக்கும் சிறந்த எதிர்காலம் உண்டு.

நட்டி சார் ஒரு யூனிக்கான ஆக்டர். இவரை புரிந்து கொள்ளவே முடியாது ஹீரோவா..? வில்லனா ..? கேரக்டர் ஆர்டிஸ்டா..? இல்ல காமெடி பண்ண போறாரா..? என புரிந்து கொள்ள முடியாது . ஆனால் எந்த கதாபாத்திரத்தில் நடித்தாலும் அதில் ஒரு அவருடைய தனித்துவமான நடிப்பு திறமை இருக்கும். அவருடைய ஒளிப்பதிவுக்கு நான் மிகப்பெரிய ரசிகன். அவர் ஒரு சிறந்த நடிகர் என்பது அவருடன் இணைந்து பணியாற்றும் போது தான் தெரிய வருகிறது.

பூமிகா- அவர் நிறைய படங்களில் நடித்திருக்கிறார் . அவரை திரையில் எப்போது பார்த்தாலும் சலிப்பே வராத ஒரு முகம். என்னுடைய குடும்பத்தினருக்கு அவரை மிகவும் பிடிக்கும். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அவருடைய ரசிகர்கள். இந்தப் படத்தில் பூமிகாவிற்கு தம்பியாக நடிக்கிறேன் என்று சொன்னவுடன் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர். இந்தப் படத்தில் அவர் நடிக்க ஒப்புக் கொண்டது இந்தப் படத்திற்கு கூடுதல் பலம். அது படம் வெளியான பிறகு அனைவருக்கும் தெரியும். அவருடைய நடிப்பு திறமை இப்படம் வெளியான பிறகு பேசப்படும்.

படப்பிடிப்பு தளத்தில் நடிகர் விடிவி கணேஷ் எப்போதும் ஜாலியாக இருப்பார். சில நேரத்தில் எனிடத்தில் சில கோணங்களை சுட்டிக்காட்டி இதில் இப்படி நடித்துப் பார் என ஆலோசனை வழங்குவார். அது ஒரு புது விஷயமாக இருக்கும். அதனால் இந்த படத்தில் சில புதிய விஷயங்களை முயற்சி செய்து இருக்கிறேன்.. இதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹாரிஸ் ஜெயராஜ் என்னுடைய படங்களுக்கு ஹிட் கொடுக்கும் இசையமைப்பாளர். 'எங்கேயும் காதல் ' 'தாம் தூம்' ஆகிய படங்களில் எல்லா பாடல்களையும் ஆல்பமாக ஹிட் கொடுத்தவர். அதேபோல் இந்தப் படத்தையும் ஹிட்டாக்கிருக்கிறார்.

என்னுடைய ரசிகர்கள் நான் நடனம் ஆட வில்லை என வருத்தப்பட்டார்கள். மேலும் நான் ஏ சர்டிபிகேட் படங்களில் மட்டும் தான் நடிக்கிறேன் என்றும் வருத்தப்பட்டார்கள். அவர்களுக்காகவும் இந்த படத்தில் நடனமாடி இருக்கிறேன். யூ சான்றிதழ் பெற்ற படம். இது. எதிர்காலத்தில் டான்ஸ் இருக்கிற படத்தில் நடிக்க ஆசைப்படுகிறேன். இந்தப் படத்தில் இடம்பெற்ற 'மக்கா மிஷி' பாடல் ஹிட் ஆகியிருக்கிறது. ஆனால் இந்த படத்தில் அக்காவுக்கும் தம்பிக்கும் இடையே ஒரு எமோஷனலான பாட்டு இருக்கிறது. இந்தப் பாட்டு .. படம் வெளியான பிறகு ஹிட் ஆகும்.

இயக்குநர் ராஜேஷ் அவர்களுடைய திறமைக்கு அவர் இன்னும் கூடுதல் உயரத்தை அடைய வேண்டும். அவர் எமோஷனை அழகாக சொல்வார். அவர் எஸ் எம் எஸ் படத்தில் சொன்ன விஷயங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அவருடைய திரைக்கதையில் இடம்பெறும் அனைத்து கதாபாத்திரங்களுக்கும் ஒரு தனித்துவம் இருக்கும். இரண்டொரு காட்சிகள் நடிக்கும் நடிகர்களுக்கு கூட நல்லதொரு வாய்ப்பை வழங்கி இருப்பார்.

இந்தப் படத்தில் நானும் நன்றாக நடித்திருக்கிறேன். ஹீரோயின் பிரியங்கா அழகான க்யூட்டான பெண். படப்பிடிப்பு தளத்தில் அவர் ஒரு காட்சியில் இருக்கிறார் என்றாலே அனைவரது கவனத்தையும் கவர்ந்து விடுவார். டயலாக் சொல்லும்போதும் சிறப்பாக பேசுவார்.

இந்தப் படம் அனைவரும் குடும்பத்துடன் திரையரங்கத்திற்கு சென்று ஜாலியாக ரசிக்கக் கூடிய படம். அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்," என்றார்.

நடிகை பூமிகா சாவ்லா பேசுகையில், ''இந்தப் படம் எனக்கு ஸ்பெஷலானது. இந்த படத்தில் பணியாற்றியது மறக்க இயலாத அனுபவமாக இருந்தது. நடிகர் ரவி அற்புதமான மனிதர், திறமையான நடிகர். பிரியங்கா அருள் மோகன் க்யூட்டான பொண்ணு. இந்த திரைப்படம் அக்காவிற்கும் தம்பிக்கும் இடையேயான உறவை பேசுகிறது. இந்த படத்தை திருவிழா நாளில் திரையரங்கத்திற்கு சென்று ரசித்து கொண்டாடுங்கள்,'' என்றார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# சிஎஸ்ஐ பள்ளிகளில் ஆசிரியர் மற்றும் அலுவலக உதவியாளர் வேலை வாங்கி தருவதாக கூறி ரூபாய் 51 லட்சம் பெற்று போலி பணி நியமன ஆணை கொடுத்து ஏமாற்றிய பெண் உடற்பயிற்சி ஆசிரியர் கைது

சென்னை, 30 அக் 2024: சென்னையை சேர்ந்த சு ஏழுமலையிடம் உடற்பயிற்சி ஆசிரியராக பணிபுரியும் சிவசங்கரி சிஎஸ்ஐ டயோசிஸ்-ற்க்கு சொந்தமான பள்ளிகளில் ஆசிரியர் மற்றும் அலுவலக உதவியாளர் பணிகள் காலியாக உள்ளதாகவும், ஆசிரியர் பணிக்கு ரூபாய் 7 லட்சமும் அலுவலக உதவியாளர் பணிக்கு ரூபாய் இரண்டரை லட்சம் கொடுத்தால் வேலை வாங்கி தருவதாக ஆசை வார்த்தை கூறியுள்ளார்.

அவர் கூறியதை நம்பி சு.ஏழுமலை தனது உறவினர் மற்றும் தெரிந்தவர்களின் வேலைக்காக சுமார் 25 லட்சம் வாங்கி சிவசங்கரிடம் கொடுத்துள்ளார். பணத்தை பெற்றுக்கொண்டு போலியான பணி நியமன ஆணை வழங்கியுள்ளார் சிவசங்கரி அது தொடர்பாக சு ஏழுமலை கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. புலன் விசாரணையில் சிவசங்கரி பெரம்பூரில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்பது தெரிய வந்தது.



மேலும் கிறிஸ்தவ தென்னிந்திய திருச்சபைக்கு சொந்தமான பள்ளிகளில் அதிக சம்பளத்தில் ஆசிரியர் பணி மற்றும் உதவியாளர் அலுவலக உதவியாளர் பணி காலியாக உள்ளதாக ஏழுமலையிடம் ஆசை வார்த்தை கூறியுள்ளார் அதனை நம்பி ஏழுமலை தனக்குத் தெரிந்த ஐந்து நபர்களிடம் இருந்து ரூபாய் 25 லட்சத்தை வாங்கி சிவசங்கரிடம் கொடுத்துள்ளார். பணத்தைப் பெற்றுக் கொண்ட சிவசங்கரி ஐந்து நபர்களுக்கு போலியான பணி நியமன ஆணை வழங்கி உள்ளதும் மேலும் 6 நபர்களிடம் இதே போல் வேலை வாங்கித் தருவதாக கூறி ரூபாய் 26 லட்சம் வரை மோசடி செய்துள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்தது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அருண் உத்தரவின் பெயரில் வேலை வாய்ப்பு மோசடி தடுப்பு பிரிவினர் தலைமறைவாக இருந்த சிவசங்கரியை தேடி வந்த நிலையில் 29.10.2024-ஆம் தேதி மேற்படி வழக்கில் முக்கிய குற்றவாளியான சிவசங்கரி என்பவரை கைது செய்து சிவசங்கரிடம் இருந்து வழக்கு சம்பந்தமான போலியான பணி நியமன ஆணைகள் மற்றும் சிவசங்கரியின் கைப்பேசி ஆகியவற்றை கைப்பற்றியும் சிவசங்கரியை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் படி சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அருண் இதுபோன்ற பணத்தைப் பெற்றுக் கொண்டு வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றுபவர்களை நம்ப வேண்டாம் என்றும், அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பசும்பொன் தேவரை போற்றும் செயல்கள், திட்டங்களை தொடர்ந்து செய்வோம்: முதல்வர் ஸ்டாலின் பேட்டி



சென்னை, 30 அக் 2024: பசும்பொன் தேவரை போற்றும் செயல்கள், திட்டங்களை தொடர்ந்து செய்வோம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று ராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில், முத்துராமலிங்கத் தேவரின் 117-வது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் முத்துராமலிங்கத் தேவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்பு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: “அன்றைய அறம் வளர்த்த பாண்டிய மன்னர்களின் ஒருமித்த இளவல் போன்று, கம்பீரமாகக் காட்சி அளித்தார் தேவர் திருமகன்" - என்று அண்ணா அவரைப் பாராட்டியிருக்கிறார்.

“வீரராக பிறந்தார்; வீரராக வாழ்ந்தார்; வீரராக மறைந்தார்; மறைவுக்குப் பிறகும் வீரராக போற்றப்படுகிறார்”- என்று கலைஞர் அவரைப் பற்றி புகழ்ந்து பேசியிருக்கிறார். அத்தகைய தியாகியை போற்றும் அரசாக, தி.மு.க. அரசு செயல்பட்டு வருகிறது என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். தேவர் புகழ் சேர்க்க திட்டங்கள்

மதுரை மாநகரில் மாபெரும் வெண்கலச் சிலை, பசும்பொன் மண்ணில் நினைவில்லம்,

மேல்நீலிதநல்லூர் - கமுதி - உசிலம்பட்டி ஆகிய இடங்களில் மூன்று அரசு கலைக் கல்லூரிகள், மதுரை ஆண்டாள்புரத்தில், "முத்துராமலிங்கத் தேவர் பாலம்" - என்று பெயரிட்டோம்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் கல்வி அறக்கட்டளை, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினருக்கு கல்வி வேலைவாய்ப்புகளில் 20 விழுக்காடு ஒதுக்கீடு. கடந்த 2007-ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாவை மிக எழுச்சியோடு நாம் கொண்டாடியிருக்கிறோம்.

அப்போது, திருமகனார் வாழ்ந்த இல்லம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. விழாவை அடையாளம் காட்டக்கூடிய வகையில் வளைவு அமைக்கப்பட்டிருக்கிறது. அணையா விளக்கும் நாம் அமைத்திருக்கிறோம். நூலகக் கட்டடம் - பால்குடங்கள் வைப்பதற்கு மண்டபம் - முளைப்பாரி மண்டபம் என்று பசும்பொன்தேவர் திருமகனாருக்குப் புகழ் சேர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றியிருக்கிறோம்.

இப்போது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 117-வது பிறந்தநாளை முன்னிட்டு குருபூஜை நடத்தியிருக்கிறோம். பசும்பொன்னில் இருக்கும் அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசு அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பான முறையில் செய்திருக்கிறது.

நேற்று முன்தினம் கூட, பசும்பொன் திருமகனாரின் பிறந்தாள் விழாவின் போது ஏற்படுகின்ற கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும், மழை வெயிலில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்கவும் 1 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில் புதியதாக அமைக்கப்பட்ட தெய்வீகத் திருமகனார் உ.முத்துராமலிங்கத் தேவர் அரங்கத்தை திறந்து வைத்திருக்கிறோம். இதுபோன்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் போற்றும் செயல்களையும் திட்டங்களையும் தொடர்ந்து செய்வோம்.

எனவே அவரது புகழ் வாழ்க! வாழ்க என்று இந்த நேரத்தில் குறிப்பிட்டு கூறிக்கொள்கிறேன்.

கேள்வி: பிஜேபி மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்திருக்கிறது. மீனவர்களின் கைது அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. அது பற்றி...

முதலமைச்சர் பதில்: தொடர்ந்து நாங்கள் கடிதம் எழுதிக்கொண்டு இருக்கிறோம். நான் டெல்லிக்கு செல்லும் போதெல்லாம் பிரதமரிடம் பேசியிருக்கிறேன். வெளியுறவுத் துறை அமைச்சரிடத்திலும் இதை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறோம். அவர்களும் அவ்வப்போது, நாங்கள் எழுதக்கூடிய கடிதத்திற்கு நடவடிக்கை எடுத்து, மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு வருகிறார்கள். இருந்தாலும், இது தொடர்ந்து இருந்துவருகிறது. இதற்கு முடிவு காண வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். அதில் எந்தவிதமான கருத்து மாறுபாடும் கிடையாது.

கேள்வி: கலைஞரால் தொடங்கப் பட்ட தேவர் கல்லூரியில் பணியிடங்கள் நிரப்புவது தொடர்பாக..

பதில்: அதற்கு தொடர்ந்து நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். இப்போது கூட 12 பேருக்கு பணி நியமனம் வழங்கியிருக்கிறோம். உரிய நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படும்.

கேள்வி: காவிரி வைகை குண்டாறு இணைப்புத் திட்டம் கடந்த 60 ஆண்டுகளாக கிடப்பில் இருக்கிறது. அதுபற்றி...

பதில்:2008 ம் ஆண்டு கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது தான் காவிரி குண்டாறு திட்டத்தின் முதற்கட்டப் பணி கதவணையிலிருந்து துவக்கப்பட்டது. அதன்பிறகு வந்த அண்ணா திமுக ஆட்சியில் 9 ஆண்டு காலம் அதை கிடப்பில் போட்டுவைத்திருந்தார்கள். கடைசி வருடத்தில் தான் அதை செய்யப்போகிறோம் எனும் அறிவிப்பை வெளியிட்டு தொடர்ந்தார்கள். அதையும் கோவிட் பெருந்தொற்று வந்த காரணத்தினால் கிடப்பில் போடப்பட்டது. இப்போது நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு அந்தப் பணிகளை துரிதப்படுத்தி தற்போது 40 சதவிகிதம் வரை நிலஎடுப்பு பணிகள் முடிந்திருக்கிறது. தொடர்ந்து அந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். இவ்வாறு ஸ்டாலின் கூறினார்.

# 30 வீரர்களுக்கு ரூ.40½ லட்சம் விளையாட்டு போட்டி உதவிகள்: துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்



சென்னை, 30 அக் 2024: துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 29 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.31.95 லட்சத்திற்கான காசோலைகள், ஒரு சைக்கிள் பந்தைய வீரருக்கு ரூ.8.60 லட்சம் மதிப்பிலான அதிநவீன பந்தைய சைக்கிள் என மொத்தம் 30 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.40 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய்க்கான விளையாட்டு போட்டிகளுக்கான உதவிகளை வழங்கினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து, சீனாவில் வருகின்ற டிசம்பர் 1 முதல் 7 -ந் தேதி வரை நடைபெறவுள்ள 4 வது உலக ஜூனியர் சாப்ட் டென்னிஸ் போட்டியில் (சிறுவர் மற்றும் சிறுமியர்) கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ள 24 வீரர், வீராங்கனைகளுக்கு போட்டிக்கான செலவினமாக தலா ரூ.1 லட்சம் வீதம் 24 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

தொடர்ந்து, தாய்லாந்து நாட்டில் 1.12.2024 முதல் 7.12.2024 வரை நடைபெறவுள்ள உலக திறன் விளையாட்டு இளைஞர் போட்டியில் கலந்து கொள்ள உள்ள 5 நரம்பியல் சார் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு விமான கட்டணம், தங்குமிட செலவினம் மற்றும் போட்டிக்கான நுழைவு கட்டணத்திற்கான மொத்த செலவுத்தொகை 7 லட்சத்து 95 ஆயிரம் - ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

தூத்துக்குடியைச் சேர்ந்த சைக்கிளிங் விளையாட்டு வீரர் சூர்யபிரகாஷ் தேசிய, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வகையில் அவருக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து பந்தய சைக்கிள் வழங்க நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி பரிந்துரை செய்திருந்தார்.

இன்றைய நிகழ்வில் சைக்கிளிங் விளையாட்டு வீரர் சூர்யபிரகாஷ்க்கு ரூ.8 லட்சத்து 60 ஆயிரம்- மதிப்பிலான அதிநவீன பந்தய சைக்கிளை துணை முதலமைச்சர் இந்த அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார்.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, விளையாட்டு சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தீபாவளி வாழ்த்து

சென்னை, 30 அக் 2024: இ.யூ. முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் வெளியிட்டுள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது: தீப ஒளி திருவிழா கொண்டாடும் தமிழகத்து இந்து சகோதர, சகோதரிகள் அனை வருக்கும் இதயம் நிறைந்த இனிய நல்வாழ்த்துகள். இருளை நீக்க உதிக்கும் ஒளியின் அடையாளமாகத் தீப ஒளி திருவிழா அமைந்திருக்கிறது. விண்ணிலும் மண்ணிலும் மண்டியிருக்கும் இருளை ஓட்டும் ஒளியை விட, இதயத்தைக் கவ்வியிருக்கும் இருளை அகற்றும் ஒளியே மானிடருக்குப் பெரும் நன்மை தருவதாகும். அதனால் தான் இதனை “உள்ளிருளைப் போக்கும் ஒளி” என்று ஆன்மீகப் பெரியோர் கூறி வந்திருக்கிறார்கள். இன்றைய மனித சமுதாயத்தில் அறியாமை, கல்லாமை, இல்லாமை, சமூக சுமூகம் இல்லாமை, பொறாமையும் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள பகைமையும், வன்முறையும் தலைவிரித்தாடுவதைப் பார்க்கும்போது, இவற்றுக்கெல்லாம் முடிவும் விடிவும் ஏற்படுத்தக்கூடிய அறிவொளியும், நல்லெண்ண ஒளியும், சமுதாய சௌஜன்ய ஒளியும்,

ஏற்பட வேண்டும் என்ற பிரார்த்தனை நடத்திட வேண்டிய காலம் இது. இக்காலத்தில் வந்திருக்கும் தீப ஒளி திருவிழா மனித நேயத்தை வளர்க்கும் மனவெளிச்சத்தை தரும் விழாவாக ஆசிப்போம்; எல்லோரையும் ஒரு தாய் மக்களாக நேசிப்போம் - எங்கும் எதிலும் இறையருள் நிறைந்திட யாசிப்போம். இவ்வாறு தனது வாழ்த்து செய்தியில் கூறியிருக்கிறார்.

# அயோத்தி குரங்குகள் உணவுக்கு ரூ.1 கோடி நன்கொடை: நடிகர் அக்ஷய் குமார் வழங்கினார்

சென்னை, 30 அக் 2024: நடிகர் அக்ஷய்குமார் அயோத்தியில் உள்ள குரங்குகளின் உணவிற்காக ரூ.1 கோடியை நன்கொடையாக அளித்துள்ளார்.

நடிகர் அக்ஷய் குமார் பாலிவுட்டில் முன்னணி நடிகராக இருக்கிறார். தீபாவளி பண்டிகையை முன்னிட்டு உத்தரப் பிரதேசம் மாநிலம் அயோத்தியிலுள்ள குரங்குகளுக்கு உணவளிக்கும் தன்னார்வ அமைப்பிற்கு ரூ.1 கோடியை அக்ஷய் குமார் நன்கொடையாக கொடுத்துள்ளார்.

இது குறித்து ஆஞ்சநேயா சேவா தொண்டு நிறுவனத்தின் தலைவர் பிரியா குப்தா கூறுகையில், ‘நாங்கள் குரங்களுக்கு உணவளிப்பது மட்டுமல்லாமல், அவைகளால் மனிதர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் சில கவனமான நடவடிக்கைகளையும் எடுக்கிறோம். நடிகர் அக்ஷய் குமார் பரந்த மனம் கொண்டவர். அவர் பெருந்தன்மையுடன் இந்த நன்கொடையை வழங்கியுள்ளார்’ எனத் தெரிவித்துள்ளார்.

## இந்த ஆண்டு பணியமர்த்தப்பட்ட 10% தொழிலாளர்களுக்கு 2000 இல் இல்லாத வேலைப் பெயர்கள் உள்ளன. லிங்க்ட்இன் தொடக்க வேலை மாற்றம் ஸ்னாப்ஷாடை கண்டறிகிறது

*சென்னை, 30 அக் 2024:* பணியிட மாற்றம் முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் முடுக்கிவிடப்பட்டுள்ளது , லிங்க்ட்இனின் தொடக்க வேலை மாற்றம் ஸ்னாப்ஷாட்டின் புதிய தரவுகளுடன், 2024 இல் உலகளவில் பணியமர்த்தப்பட்ட 10% தொழிலாளர்கள் 2000 ஆம் ஆண்டில் இல்லாத வேலைப் பட்டங்களைப் பெற்றுள்ளனர். நிலைத்தன்மை மேலாளர் போன்ற பொறுப்புகள் , ஏ ஐ பொறியாளர், தரவு விஞ்ஞானி, சமூக ஊடக மேலாளர் மற்றும் வாடிக்கையாளர் வெற்றி மேலாளர் ஆகியவை இப்போது பொதுவானவை. தொலைதூர வேலைகளைச் சுற்றியுள்ள தொற்றுநோய் காலக் கொள்கைகளை நிறுவனங்கள் மறுபரிசீலனை செய்தாலும், புதிய தொழில்நுட்பங்களின் தோற்றம் அல்லது நிலைத்தன்மையில் அதிக கவனம் செலுத்துவது, லிங்க்ட்இனின் பணி மாற்ற ஸ்னாப்ஷாட் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒப்பிடும்போது நவீன பணியிடங்கள் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை வெளிப்படுத்துகிறது. மேலும் உருமாற்றத்தின் வேகம் அதிகரிக்க மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது: 5,000 க்கும் மேற்பட்ட உலகளாவிய வணிகத் தலைவர்களின் ஆய்வில், இந்தியாவில் உள்ள 82% தலைவர்கள் வேலையில் மாற்றத்தின் வேகம் அதிகரித்து வருவதாக லிங்க்ட்இன் கண்டறிந்துள்ளது

உலகளாவிய வணிகத் தலைவர்கள் ஜெனரேட்டிவ் ஏ ஐ இன் மாற்றும் திறனை அங்கீகரிக்கின்றனர், இந்தியாவில் 10ல் 9 பேர் தொழில்நுட்பம் தங்கள் குழுக்களுக்கு பயனளிக்கும் வகையில் குறைந்தபட்சம் ஒரு வழியைப் புகாரளிக்கின்றனர், மேலும் 10ல் 7 பேர் 2025 ஆம் ஆண்டில் ஏ ஐ கருவிகளைப் பின்பற்றுவதற்கு முன்னுரிமை அளிக்கின்றனர். ஏ ஐஐ ஏற்றுக்கொள்வதன் நன்மைகள் அதிகரித்த உற்பத்தித்திறனைத் தாண்டிச் செல்லுங்கள். லிங்க்ட்இன் தரவு, ஜெனரேட்டிவ் ஏ ஐ இல் தேர்ச்சி பெற்ற பணியாளர்கள் தொழில்முறை நெட்வொர்க்கிங், தனிப்பட்ட வர்த்தகம், வடிவமைப்பு சிந்தனை மற்றும் படைப்பாற்றல் மற்றும் உணர்ச்சி நுண்ணறிவு போன்ற அத்தியாவசிய மென்மையான திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் 20 மடங்கு அதிகம் என்று காட்டுகிறது. உண்மையில், இந்தியாவின் முதல் ஐந்து லிங்க்ட்இன் கற்றல் படிப்புகள், கம்யூனிகேஷன் ஃபவுண்டேஷன்ஸ் மற்றும் பில்டிங் டிரஸ்ட் உட்பட, இந்த முக்கியமான மென்மையான திறன்களில் கவனம் செலுத்துகின்றன. நவீன மேலாண்மைக்கான தகவல் தொடர்புத் திறன்கள் மற்றும் கடினமான உரையாடல்களுக்கான மேலாளரின் வழிகாட்டி போன்ற படிப்புகளின் பிரபலம், சீனியாரிட்டி நிலைகளில் இந்தத் திறன்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதை பிரதிபலிக்கிறது.

லிங்க்டின் டேலண்ட் சொல்யூஷன்ஸ்-ன் இந்தியத் தலைவர் ருச்சி ஆனந்த் கூறுகையில், “ஏ ஐ நிறுவனம் முன் எப்போதும் இல்லாத வகையில் பணியிடத்தை மாற்றி வருகிறது. இந்தியாவில் கிட்டத்தட்ட 82% தொழில் வல்லுநர்கள் விரைவான மாற்றத்தின் தாக்கத்தை உணர்கிறார்கள், இந்த மாற்றத்தை வழிநடத்த அதிக நிறுவனங்கள் உறுதிபூண்டிருப்பது ஊக்கமளிக்கிறது. 2025 ஆம் ஆண்டைப் பார்க்கும்போது, வணிகங்கள் தங்கள் மக்களை மேம்படுத்துதல் மற்றும் மறுதிறமைப்படுத்துதல் ஆகியவற்றில் அர்த்தமுள்ள முதலீடுகளுடன் ஏ ஐ தத்தெடுப்புக்கு அதிகளவில் முன்னுரிமை அளிக்கின்றன. ஏ ஐஐத் தழுவுவது என்பது வேகத்தை வைத்திருப்பது மட்டுமல்ல; இது குழுக்களுக்கு அதிகாரம் அளிப்பது, புதுமைகளை வளர்ப்பது மற்றும் செழிக்கத் தயாராக இருக்கும் மீள் திறன் கொண்ட பணியாளர்களை உருவாக்குவது. நிறுவனங்கள் ஏ ஐ ஐ வென்றெடுக்கவும், திறன் மேம்பாட்டிற்கு உறுதியளிக்கவும், மேலும் நம்பிக்கையுடன் பணியின் எதிர்காலத்தை வழிநடத்தவும் வேண்டிய தருணம் இது."

லிங்க்டின் புதிய ஏ ஐ-இயங்கும் கருவிகளை அறிவிக்கிறது வேகமாக மாறிவரும் உலகத்தைத் தொடர வணிகங்கள் பந்தயத்தில் ஈடுபடுவதால், இந்த மாற்றத்திற்கு வழிகாட்ட மனிதவளக் குழுக்கள் அதிகளவில் நம்பியுள்ளன. இந்தியாவில், 69% மனிதவள வல்லுநர்கள், பணியிடத்தில் தங்களுடைய எதிர்பார்ப்புகள் அதிகமாக இருந்ததில்லை என்று தெரிவிக்கின்றனர். கூடுதலாக, 10 இல் 6 பேர் போட்டித்தன்மையுடன் இருக்க அனுபவம் மட்டும் போதாது என்பதை ஒப்புக்கொள்கிறார்கள், பாதிக்கு மேல் தொழில் வளர்ச்சி இப்போது ஏ ஐ-ஐத் தழுவுவதைப் பொறுத்தது என்பதை ஒப்புக்கொள்கிறார்கள்.

## முப்படைகளின் தளபதி ஜெனரல் அனில் சௌகான் அல்ஜீரியாவுக்கு அரசுமுறைப் பயணம்

*சென்னை, 30 அக் 2024:* முப்படைகளின் தளபதி (சிடிஎஸ்) ஜெனரல் அனில் சௌகான் இன்று (2024 அக்டோபர் 31) முதல் 2024 நவம்பர் 04 வரை அல்ஜீரியாவுக்கு அரசுமுறைப் பயணத்தை மேற்கொள்கிறார். இது பாதுகாப்பு ஒத்துழைப்பில் இந்தியாவிற்கும் அல்ஜீரியாவிற்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும். தமது பயணத்தின் போது, ஜெனரல் அனில் சௌகான் அல்ஜீரிய ராணுவத்தின் தலைமைத் தளபதி சயீத் சானெக்ரிஹாவை சந்தித்துப் பேசுவார். அத்துடன் அல்ஜீரிய பாதுகாப்பு அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளுடனும் அவர் பேச்சு நடத்த உள்ளார்.

ராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்துதல், பாதுகாப்பு நலன்களை வலுப்படுத்துதல், திறன் மேம்பாடு, இருதரப்புப் பயிற்சி, தொழில்நுட்ப பரிமாற்றம் போன்றவை குறித்து அல்ஜீரிய அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொள்வார். இரு நாடுகளுக்கும் இடையிலான ராணுவ ஒத்துழைப்பை உறுதிப்படுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் இந்தப் பயணத்தின் போது கையெழுத்தாகவுள்ளது.

1954 நவம்பர் 01 ஆம் தேதி நடைபெற்ற அல்ஜீரியப் புரட்சியின் 70-வது ஆண்டு நிறைவை நினைவுகூரும் ராணுவ அணிவகுப்பு விழாவுக்கு ஜெனரல் சௌகான் கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார். அல்ஜீரியாவில் உள்ள மதிப்புமிக்க போர் பள்ளிக்கும் திரு அனில் சௌகான் செல்ல உள்ளார். அங்கு அவர் மூத்த அதிகாரிகளிடையே உரையாற்றுவார்.

குடியரசுத் தலைவர் அண்மையில் அல்ஜீரியாவுக்கு அண்மையில் மேற்கொண்ட பயணத்தைத் தொடர்ந்து முப்படைகளின் தளபதி, அந்நாட்டுக்கு இந்தப் பயணத்தை மேற்கொள்கிறார்.

## கொலை வழக்கில் நடிகர் தர்ஷனுக்கு கர்னாடக ஐகோர்ட் இடைக்கால ஜாமீன்

*சென்னை, 30 அக் 2024:* கொலை வழக்கில் கைதாகி சிறையில் உள்ள கன்னட நடிகர் தர்ஷனுக்கு கர்நாடக உயர் நீதிமன்றம் இடைக்கால ஜாமீன் வழங்கியுள்ளது. மருத்துவ காரணங்களுக்காக ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.

பிரபல கன்னட நடிகரான தர்ஷன், தனது தோழியும் நடிகையுமான பவித்ரா கவுடாவை சமூக வலைதளத்தில் சீண்டிய தனது ரசிகர் ரேணுகா சுவாமி என்பவரை கடத்தி கொலை செய்த வழக்கில் கடந்த ஜூன் மாதம் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் பவித்ரா கவுடா, தர்ஷனின் நண்பர்கள், ரசிகர் மன்ற தலைவர், பவுன்சர்கள் கைது செய்யப்பட்டனர்.

பெங்களூரு பரப்பன அக்ரஹாரா மத்திய□ சிறையில் தர்ஷன் அடைக்கப்பட்டார். அங்கு அவருக்கு கிடைத்த சொகுசு வசதிகள் குறித்த படங்கள் சமூக வலைதளத்தில் வெளியாகி சர்ச்சை ஆனது. அதைத் தொடர்ந்து கடந்த ஆகஸ்ட் மாதம் அவர் பெல்லாரி சிறைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், முதுகு தண்டு பகுதியில் ஏற்பட்ட பாதிப்புக்கு மருத்துவ சிகிச்சை பெற உள்ளதாக சொல்லி கர்நாடக மாநில ஐகோர்ட்டில் தர்ஷன் தரப்பில் ஜாமீன் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதில் விஜயநகர மருத்துவ கழகத்தின் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரின் மருத்துவ அறிக்கையும் வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அவருக்கு 6 வார காலம் ஐகோர்ட் இடைக்கால ஜாமீன் வழங்கியுள்ளது.

நீதிபதி விஷ்வஜித் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். இந்த வழக்கில் இருந்து தன்னை விடுவிக்க கோரி தர்ஷன் தரப்பில் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட ஜாமீன் மனு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

தர்ஷன் தனக்கு விருப்பம் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெறலாம். சிகிச்சை பெறும் மருத்துவமனையின் விவரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

அவருக்கு வழங்கப்படும் சிகிச்சை குறித்த விவரங்களை அறிக்கையாக ஒரு வார காலத்தில் சமர்ப்பிக்க வேண்டும். சிகிச்சையை தவிர வேறு விவகாரங்களிலும் ஈடுபடக் கூடாது. தர்ஷன் தனது பாஸ்போர்ட்டை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

## இந்த தீபாவளியில் சுத்தமான வீடுகள் மற்றும் பளபளக்கும் தரைகளுடன் செல்வத்தை வரவேற்கவும்

*சென்னை, 30 அக் 2024:* நாம் ஒளியின் திருவிழாவான தீபாவளிக்குத் தயாராகும் வேளையில், பண்டிகைக் காலத்தின் நடுவில் இருக்கிறோம். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் மாறுபட்ட மரபுகள் மற்றும் கலாச்சாரங்களுடன், தீபாவளி ஒவ்வொரு வீட்டிலும் தனித்துவமாகக் கொண்டாடப்படுகிறது, மேலும் இது இருளின் மீது ஒளியின் ஆன்மீக வெற்றியைக் குறிக்கிறது.

பாரம்பரியமாக, இது ஒவ்வொரு வீடும் நேர்மறையை கொண்டு வர முழுமையாக சுத்தம் செய்யப்படும் நேரம், மேலும் வேப்பமரத்தின் தூய்மையைப் போல் எதுவும் இல்லை - இது ஒரு பழமையான, நம்பகமான மூலிகை, இது இயற்கையாகவே உங்கள் தரைகளை சுத்தம் செய்து கிருமி நீக்கம் செய்கிறது. வேப்பமரத்தின் நன்மை உங்கள் வீட்டை தூய்மை மற்றும் புத்துணர்ச்சியின் புகலிடமாக மாற்றட்டும், பண்டிகைக் காலத்தின் மகிழ்ச்சி மற்றும் அரவணைப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருங்கள்.

டெல்லியைச் சேர்ந்த ஒரு வீட்டு அலங்கார நிபுணரும் தாயுமான பிரேர்ணா டூகர் கூறுகையில், "தீபாவளி என்பது காதல் மற்றும் ஒளியின் சரியான கலவையாகும், இது ஏக்கத்தால் நிரம்பியுள்ளது. நான் வளரும்போது, என் பெற்றோர் கொண்டாட்டங்களுக்குத் தயாராக எங்கள் வீட்டைச் சுத்தம் செய்தல், மறுசீரமைத்தல் மற்றும் அலங்கரிப்பதை எப்போதும் பார்த்தேன், எங்கள் வீடு விளக்குகள் மற்றும் சிரிப்பால் ஒளிரும் போது அது எனக்கு மிகவும் பிடித்த நினைவுகளில் ஒன்றாகும்.

இப்போது, நான் என் சொந்த வீட்டை இந்த சந்தர்ப்பத்திற்காகத் தயார்படுத்தும்போது, சுத்தமான வீட்டைக் கொண்டிருக்க ஒரு வழிகாட்டியாக என் அம்மாவைப் பார்த்து உதவிய அந்த ஆண்டுகளையெல்லாம் நான் எடுத்துக்கொள்கிறேன். இருப்பினும், நான் பசுமையான, மிகவும் நிலையான சுத்தம் செய்தல் மற்றும் என் வீட்டை அழகுபடுத்தும் வழிகளில் ஒட்டிக்கொள்ள விரும்புகிறேன். எனவே, ஐடிசி நிமைலைத் தேர்ந்தெடுப்பது, ஒரு சூடான வரவேற்புக்காக பளபளப்பான மற்றும் சுத்தமான தரையைப் பெற எனக்கு உதவுகிறது. இது 100% இயற்கையான செயல்பாட்டை* அளிக்கிறது மற்றும் எந்த இரசாயன எச்சத்தையும் விட்டுவிடாது^, என் தரை அழுக்கு இல்லாதது மட்டுமல்ல, பாதுகாப்பானது மற்றும் சுகாதாரமானது என்பதையும் எனக்கு மன அமைதியை அளிக்கிறது. தரை மட்டுமல்ல, அலமாரியை ஒழுங்கமைப்பதில் இருந்து விசிறியை சுத்தம் செய்வது வரை, ஒவ்வொரு சுத்தம் செய்யும் பணியும் எனது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் விளக்குகளின் திருவிழாவைக் கொண்டாட ஆரோக்கியமான, அமைதியான இடத்தை உருவாக்க பங்களிக்கிறது."

தீபாவளி பண்டிகையின் போது ஒழுங்கீனம் மற்றும் சுத்திகரிப்பு ஆகியவை குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன, மேலும் உங்கள் சுத்தம் செய்யும் வழக்கத்தை எவ்வாறு சிறப்பாகச் செய்யலாம் என்பதற்கான சில வழிகள் இங்கே:

1. ஒழுங்கீனத்தை அகற்றுதல்: ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் சுத்தம் செய்யப்பட்ட இடம் உங்கள் வாழ்க்கையில் செழிப்பு மற்றும் மிகுதியை அழைக்கும் என்று நம்பப்படுகிறது. கடந்தகால குறைகள் அல்லது எதிர்மறை உணர்ச்சிகளை விட்டுவிட்டு புதிய தொடக்கங்களுக்கு ஒரு இடத்தை உருவாக்குவதற்கும் ஒழுங்கீனத்தை அகற்றுவது ஒத்திருக்கிறது.

2. ஒழுங்கமைக்கவும்: ஒரு சுத்தமான வீடு பிரகாசமாகவும் நன்கு நிர்வகிக்கப்பட்டதாகவும் தெரிகிறது, மேலும் ஒவ்வொரு பயன்பாட்டிற்கும் நியமிக்கப்பட்ட இடங்களுடன் ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தை விட உங்கள் மனநிலையை கட்டுக்குள் வைத்திருக்க எதுவும் உதவாது, அதே போல் சரியான நேரத்தில் சரியான விஷயங்களைக் கண்டுபிடிப்பதும் ஆகும்.

3. சமையலறை சுத்தம்: வீட்டின் மற்ற பகுதிகளைப் போலவே சமையலறை சுத்தம் செய்வதும் முக்கியம். சிங்க் மற்றும் குளிர்சாதன பெட்டியின் கீழ் உள்ள இடத்தைத் தவறவிடாதீர்கள், இங்குதான் குப்பை மற்றும் நீர் ஆண்டு முழுவதும் சேகரிக்கப்பட்டு துர்நாற்றத்திற்கு வழிவகுக்கும், அதே போல் கரப்பான் பூச்சிகளையும் ஏற்படுத்தும். வீட்டைச் சுற்றி அலங்கரிப்பது போல, பெரிய அளவிலான சமையலுக்கு அந்த பாரம்பரிய குடும்ப பாத்திரங்களை வெளியே கொண்டு வரவும் இது சரியான நேரம். உங்கள் பானைகள் மற்றும் பாத்திரங்களின் கிரீஸை அகற்றி, அதன் லிஃப்ட் ஆஃப் ஆக்ஷன் மூலம் பளபளப்பை மீட்டெடுக்க ஐடிசி நிமீஸியைப் பயன்படுத்தவும், இது உங்கள் சமையலறை சுத்தம் செய்யும் வேலையை தொந்தரவு இல்லாததாக ஆக்குகிறது.

4. வாசனை உறிஞ்சிகளைப் பயன்படுத்தவும்: உங்கள் இடத்தை முழுமையாக சுத்தம் செய்வது என்பது வீட்டின் ஒவ்வொரு மூலையும் சுத்தமாகவும் புதியதாகவும் இருக்கும் என்பதாகும். நீங்கள் சில வேப்ப இலைகளை ஒரு சிறிய பையில் போட்டு, நுட்பமான இயற்கை நறுமணத்திற்காக மூலைகளில் வைக்கலாம் அல்லது உங்கள் அறைகளைச் சுற்றி அமைதியான நறுமணத்திற்காக ஒரு டிஃப்பியூசரில் வேப்ப எண்ணெயைப் பயன்படுத்தலாம். ஐடிசி நிமைல் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த தரை கிளீனர் நீண்ட காலம் நீடிக்கும் புதிய நறுமணத்தை விட்டுச்செல்லும்.

5. மறு அலங்காரம்: சுத்தம் செய்யும் செயல் பழைய, பயன்படுத்தப்படாத பொருட்களை அகற்ற உதவும், இதனால் ஒவ்வொரு அலங்காரப் பொருளும் அல்லது உச்சரிப்பும் அதன் சொந்த அறிக்கையை வெளியிடவும் தனித்து நிற்கவும் அனுமதிக்கிறது. உங்கள் தளபாடங்களைச் சுற்றி நகர்த்தி, வேறுபட்ட அமைப்பை முயற்சிக்கவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம் - இதையொட்டி, உங்கள் வீட்டில் நிலையான மற்றும் புதிய அதிர்வைப் பெறுங்கள்.

தீபாவளி என்பது உங்கள் வீட்டை சுத்தம் செய்வதற்கான சரியான நேரம், ஏனெனில் ஒளியின் திருவிழா நமது வருடத்தை பிரகாசமாக்குகிறது, சூழ்நிலையைப் புதுப்பிக்கிறது மற்றும் இயற்கையான சுத்தம் செய்தலுடன் வரவிருக்கும் கொண்டாட்டங்களுக்கான அதிர்வை அதிகரிக்கிறது.

*100% இயற்கை ஆன்டி-மைக்ரோபியல் செயல்பாடு ஆய்வக ஆய்வின் அடிப்படையில் ^ஆய்வக ஆய்வின் அடிப்படையில். பேக்கில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பயன்படுத்தவும்.

## இந்த பண்டிகை காலத்தில், சிறு வணிகங்களின் வளர்ச்சியை அதிகரிக்க செல்ஃபி லோன்ஸ் செயலியை ஈக்விடாஸ் எஸ் எஃப் பி அறிமுகப்படுத்துகிறது

*சென்னை, 30 அக் 2024:* ஈக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க், செல்ஃபி லோன்ஸ் இன் அறிமுகத்தின் மூலம் ஒரு பிரத்யேக மொபைல் கடன் செயலியை வழங்கும் முதல் சிறு நிதி வங்கி என்ற பெருமையைப் பெறுகிறது. இந்த செயலியின் இந்த பயனர் நட்பு இடைமுகம், அதன் பயனர்கள் தங்கள் இருப்பிடத்தின் வசதியிலிருந்தே கடன்களுக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கிறது.

பண்டிகைக் காலம் நெருங்கிவருவதால், மளிகைக் கடைகள், டீக்கடைகள் மற்றும் பழுதுபார்க்கும் மையங்கள் போன்ற சிறு வணிகங்களின் அதிகரித்த நிதித் தேவைகளை ஈக்விடாஸ் எஸ் எஃப் பி அறிந்திருக்கிறது. இந்த நிறுவனங்களுக்கு சரக்கு அதிகப்படுத்துதலை ஆதரிப்பதற்கும், பணி மூலதனத்தை நிர்வகிப்பதற்கும், பருவகால வணிக வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கும் கூடுதல் நிதி தேவைப்படுகிறது. இந்தத் தேவையை நிவர்த்தி செய்ய, இந்த வங்கி கடன் வாங்குபவரின் சொத்துக்கு எதிராக பாதுகாக்கப்பட்ட நீண்ட காலக் கடன், காலக் கடன்கள் ஆகியவற்றை செல்ஃபி லோன்ஸ் செயலி மூலம் வழங்குகிறது. இந்த முக்கியமான வணிகக் காலத்தில் சிறு வணிகங்கள் செழிப்பதற்கு அதிகாரமளிக்க, வடிவமைக்கப்பட்ட நிதித் திட்டங்களுடன் டிஜிட்டல் கடன்வழங்குதலின் நெகிழ்வுத்தன்மையை இது ஒருங்கிணைக்கிறது.

இந்த செயலியின் மூலம், நிதிச் சேவைகள் துறையில் இணையப் பயன்பாட்டை அதிகரிக்கவும், நிதி மோசடிகளுக்கு ஆளாகும் பயனர்களின் வாய்ப்புகளைக் குறைக்கவும் நோக்கம்கொண்டு இந்த வளர்ந்து வரும் தேவைக்கு தீர்வை வழங்குவதில் ஈக்விடாஸ் கவனம் செலுத்துகிறது. தற்போது, சொத்து மீதான கடன்கள், வீட்டுக் கடன்கள், வணிகர் ஓவர் டிராஃப்ட், புதிய மற்றும் பயன்படுத்திய கார் மற்றும் வணிக வாகன கடன்கள் உள்ளிட்ட பாதுகாப்பான கடன்களை

வருமான ஆதாரம் தேவையின்றி இந்த செயலி வழங்குகிறது. இந்த வங்கி கடன் திட்டங்களை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது மேலும் அவை இந்த செயலியினுள் கிடைக்கும்.

பிராந்திய மொழிகளில் அணுகக்கூடிய ஒரு பயனர் நட்பு இடைமுகத்துடன், ஐ ஓ எஸ் மற்றும் ஆண்ட்ராய்ட் ஆப் ஸ்டோர்கள் இரண்டிலும் செல்ஃபி லோன்ஸ் ஆப் கிடைக்கிறது. இந்த செயலி மூலம், இந்த வங்கி தற்போது பாதுகாக்கப்பட்ட கடன்களை வழங்குகிறது மற்றும் சம்பளம் பெறும் பணியாளர்களுக்கான தனி நபர் கடன்களை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. கூடுதலாக, வாடிக்கையாளர்கள் தங்கள் கடனை இந்த செயலி மூலம் கண்காணிக்கலாம் மற்றும் நிர்வகிக்கலாம்.